முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான் எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 01 திகதி முதல்
சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 08 திகதி வரை
(18.09.2022 ஞாயிறு முதல் 25.09.2022 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. ஞானிகள் பலம் கொண்ட தமிழகமே
ஞான ஆளுமை கண்ட பாரதமே
இனிமைபட அகத்திய மகரிஷியும்
இந்தியா தமிழக எதிர்கால பலன் குறித்து
2. குறித்துமே சுபகிருது தரிவை திங்கள்
குறைவிலா ஏகதிகதி மேல் அட்டம திகதிவரை
தெரிவிப்பேன் நடக்கும் வார நிகழ்வாக
தேசிகன் கேட்க ஆசிதனை உரைப்பேன்
3. உரைக்கவே பேரிடர் அழிவென
உருக்குலைவு பல கண்டும்
கரைபட ஊழல் சக்திபட
கடமை ஆற்றும் அதிகார வர்க்கமே
4. வர்க்கமே இவர்கள் எல்லாம்
வதை காணும் முன் தன்நிலை
சீர்திருத்தமாக மாற்றி உண்மைபட
சேவையாக கடமை ஆற்றிட
5. ஆற்றிடவே தீவினை என்பதில்லா
அனைத்துத் துறைகளும் மாறியே
ஆற்றல்பட எங்கும் தரும வழி
அனைத்துத் திட்டங்களும் நிறைவேறி
6. நிறைவேறி ஆளுமை சக்திகளும்
நீதி குறையா ஞான ஆட்சியாக
முறைகேடுகள் நடக்கா வண்ணம்
முழுமைபட மக்களை பாதுகாக்கின்ற
7. காக்கின்ற சக்திபலம் கூடி
கருணைமிக்க தலைமைகளும்
ஆக்கமுடன் மக்களை தேற்றும்
ஆன்மீக ஞான அரசியல் களமுமாக
8. ஆகவே ஆங்காங்கே தேற்றம்
அளவிலா கூடி இனிதே
வகையான வளர்ச்சிகள் தன்னை
வையகம் கண்டு வியக்கும்

9. வியக்கும் இந்தியா தமிழகம் தன்னின்
விரைவான வளர்ச்சி மாற்றம் கண்டு
தயாபரனான அரங்கமகானின்
தவபதம் பற்றி இவர்களெல்லாம் வர

10. வருகவே தயவு குணம் பெருகி
வாழும் காலமே பிறவி வினை வென்று
முருகப்பெருமான் அருளை பெற்று
முழுமையான சேவை கொண்ட ஞான தேசமாகும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம்:

சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 01 ம் நாள் 18.09.2022 ஞாயிற்றுக்கிழமை முதல் புரட்டாசி மாதம் 08 ம் நாள் 25.09.2022 ஞாயிற்றுக்கிழமை முடிய உள்ள கால நிகழ்வுகள்:

ஞானிகள் அநேகம்பேர் உருவாகி ஞானிகளின் அருள்பலம் பெற்றிட்ட தமிழகமே, ஞானிகள் ஆட்சியை கண்டிட்ட பாரத தேசமே சித்தர்கள் தலைவன் அகத்திய மகரிஷி யான், இந்தியா தமிழகத்தின் எதிர்கால பலன் குறித்து சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 1ம் நாள் 18.09.2022 ஞாயிற்றுகிழமை முதல் புரட்டாசி மாதம் 8ம் நாள் 25.09.2022 ஞாயிற்று கிழமை முடிய உள்ள காலத்தில் நிகழும் நிகழ்வுகளாக ஆறுமுக அரங்க மகா தேசிகனார் கேட்க வார ஆசி நூலாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

இந்திய தேசம் இயற்கை பேரிடர் அழிவுகளையும் உருக்குலைவுகளையும் கண்டபின்பும் இன்னும் கடமையாற்றலில் ஊழல் செய்கின்ற சில அதிகார வர்க்கங்களே, இவர்கள் அரசால் தண்டிக்கப்படும் முன்னராக, துன்பப்படும் முன்னராக, தங்களை திருத்திக் கொள்ளும் வகையில் அவர்கள் தங்களை உண்மையானவர்களாக, சேவைமனப்பாண்மையுடன் கடமையாற்றினால், அவர்களும் தீவினைகளில் இருந்து மீள்வதோடு அனைத்து துறைகளும் மாற்றம் அடைந்து வல்லமையுடன் தேசமெங்கும் தர்மசக்தி பரவி நாட்டின் அனைத்து திட்டங்களும் தடையின்றி நிறைவேறி ஆட்சி புரிவோரும் நீதியை பாதுகாத்து ஞான ஆட்சியாக மாறிடும். நாட்டினில் முறைகேடுகள் எதுவும் நடக்காதவாறு மக்களை முழுமையாக பாதுகாக்கின்ற வகையிலே நாட்டிற்கு சக்தி பெருகிடும், தலைமையாளர்கள் கருணையுடையவர்களாய் இருப்பார்கள் நாட்டினில் மக்களை முன்னேற்றபாதையில் செல்லுகின்ற வகையிலே ஆன்மீக அரசியல் உண்டாகிடும்.

ஆன்மீக அரசியலினால் நாடெங்கிலும் முன்னேற்றம் உண்டாகி நாடு அபரிமிதமான வளர்ச்சியை காணும் இந்த உலகமே இந்திய தேசத்தின் வளர்ச்சியை கண்டு வியப்படையும்.

தயவே வடிவான ஆறுமுக அரங்க மகாதேசிகனாரின் ஆசிபெற்று, அரங்கரின் கொள்கைகளை ஏற்று வர, அவரவர் உள்ளும் தயவுகுணம் பெருகி, இந்த ஜென்மத்திலேயே பிறவிவினைகளை வென்று ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளைப் பெற்று முழுமையான சேவை மனப்பான்மை மிகுந்த தேசமாக மாறி ஞானதேசமாக இந்தியா தமிழகம் ஆகி சிறக்கும் எனக்கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–